IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.2, SRIVILLIPUTTUR

CC NO. 434/2020

**PW – 1 Cross**

Name: திருமதி.முத்துலட்சுமி

W/o :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 13th day of March 2024

Signature of Witness.

13.03.2024

எதிரி ஆஜர்.

**சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –**

(சாட்சிக்கு அவரது முதல் விசாரணை படித்து பார்க்க அனுமதிக்கப்பட்டது.)

இதற்கு முன்பு நான் சாட்சியம் அளித்தபோது போலீசார் சொன்னதன்படி சாட்சியம் அளித்தேன் என்றால் இல்லை. நடந்ததை சொன்னேன். நான் போலீசார் சொல்லிக்கொடுத்ததை தான் எனது முதல் விசாரணையில்சொன்னேன் என்றால் சரியல்ல. நான் என்ன படித்துள்ளேன் என்றால் 12ம் வகுப்பு படித்து முடித்துள்ளேன். நான் சம்பவத்தின்போது ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டம் அலுவலகத்தில் மேற்பார்வையாளராக வேலை பார்த்தேன். எங்கள் அலுவலகம் எங்கு உள்ளதென்றால் மஞ்சப்பூ தெருவில் இருந்தது. காலை எத்தனை மணிக்கு நான் பணிக்கு செல்வேன் என்றால் காலை 10.00 மணிக்கு அலுவலகத்திற்கு செல்வேன். வேலை முடிந்து மாலை 05.30 மணிக்கு வருவேன். மதியம் சாப்பிடுவதற்கு வீட்டிற்கு வருவேன். புகாரை நான் தான் எழுதினேன். புகாரில் உள்ள விவரம் எனக்கு தெரியும். சாட்சி முருகன் சொல்லிதான் எனக்கு ஒல்லியான சிவப்பு நிறமுடைய நபர் என்று எனக்கு தெரியும் என்றால் இல்லை. நான் செயினை அக்கும்போது பார்த்தேன். முருகன் சொல்லிதான் எனக்கு தெரியும் என்றாலும், நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் இல்லை. நான் செயினை அத்தபோது திரும்பி பார்த்தேன். நான் திரும்பி பார்த்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான்

பார்த்தபோது பச்சை கலர் டீசர்ட் மற்றும் புளூகலர் கைலியும் அணிந்து ஓடினான். நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் இல்லை. நான் கண்ணால் பார்த்தேன். நான் கண்ணால் பார்க்கவில்லை என்றும், பொய்யாக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ. 1 புகார் மனு நான் எழுதியதுதான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். நான் புகார்மனுவில் நகையை அத்து சென்ற நபரின் முகத்தை பார்த்தேன் என்று வரி எழுதியுள்ளதா என்றால் இல்லை. நான் எழுத அந்நேரம் மறந்திருப்பேன். அத்து சென்ற நபரின் முகத்தை பார்த்ததாக போலீசார் விசாரணையில் நான் சொல்லவில்லை என்றால் நியாபகம் இல்லை. நான் நியாபகம் இல்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. சாட்சியிடம் சாட்சியின் கு.வி.மு.ச பிரிவு 161 வாக்குமூலத்தை காட்டி போலீசாரின் விசாரணையில் சொல்லியுள்ளீர்களா என்று கேட்டபோது சாட்சி மறந்துவிட்டேன் என்று சொல்கிறார். கற்றறிந்த எதிரி தரப்பு வழக்கறிஞர் மேற்படி வாக்குமூலத்தில் முகத்தை பார்த்தேன் என்று எழுதப்பட்டுள்ளதா இல்லையா என்று கேட்டபோது சாட்சிஇல்லை என்றும், மறந்துவிட்டேன் என்றும் சொல்கிறார். உண்மையிலேயே நான் முகத்தை பார்க்காததால் தான் எனது புகார்மனுவிலும், போலீசார் விசாரணையிலும் முகத்தை பார்த்ததாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் முகத்தை பார்த்தேன். நான் எதிரியின் முகத்தை பார்க்காமல் பார்த்தேன், பார்த்தேன் என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. புகார் மனுவில் முருகனும் நகையை திருடிச்சென்ற நபரின் முகத்தை பார்த்ததாக இல்லை என்றால் சரிதான். ஒரு ஊரில் ஒல்லியான சிவப்பு நிறம் கொண்ட பல நபர்கள் இருப்பார்கள் என்றால் சரிதான். ஆனால் நான் பார்த்தேன். நான் எனது செயினின் அடையாளம் புகார் மனுவில் சொல்லியிருந்தேனா என்றால் வீனஸ் மாடல் என்று சொல்லியுள்ளேன். வீனஸ்தான் செயின் மாடல் ஆகும். நான் செயினில் தாலி கொடி மாட்டியிருந்தேன். செயின் எப்போது எங்கு வாங்கினேன் என்று புகாரிலும், போலீசார் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சொல்லவில்லை. சங்கரநாராயணன் செட்டியார் கடையில் வாங்கினேன். அந்த கடையில் நகை வாங்கியதற்கான இரசீது தாக்கல் செய்துள்ளேனா என்றால் அதையெல்லாமா கேட்பார்களா என்று நினைத்தேன். நான் உண்மையிலேயே மேற்படி கடையில் நகை வாங்கியிருந்தால் அதற்கான ஆதராங்களை போலீசாரின் விசாரணையில் சொல்லியிருப்பேன் என்றாலும், அதற்கான இரசீதை

கொடுத்திருப்பேன் என்றாலும் சரியல்ல. எனது மகனுக்கு எத்தனை மணிக்கு தகவல் சொன்னேன் என்றால் எனது மகன் வெளியே சென்றிருந்தான் அதனால் 04.00 மணிக்கு தகவல் சொன்னேன். அவர் 1/2 மணி நேரத்தில் வந்திருப்பாரா என்றால் வந்திருப்பார். நானும், எனது மகனும் ஒரு மணி நேரம் நகையை தேடியிருப்போமா என்றால் நான்கு மணிநேரம் தேடியிருப்போம். அதற்கு பிறகுதான் புகார்மனு கொடுக்க போனோம் என்றால் ஆமாம். எங்கள் வீட்டிற்கு கிழக்கு பக்கம் நம்பிநாயுடு தெரு உள்ளதென்றால் சரிதான். அந்த தெருவிற்கு தெற்கு பக்கம் சக்கரை குளம் உள்ளதென்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லும் இடம் மூன்று முக்குகள் சந்திக்கும் இடம் என்றால்சரிதான். அங்கு நிறைய வீடுகள் உள்ளதென்றால் சரிதான். எங்கள் வீட்டை சுற்றியுள்ள ராஜு, துரைராஜ், புருசோத்தமன், கென்னடி, சங்கிலிகாளை ஆகியோருக்கும் எனக்கு எந்த பிரச்சனையும் இல்லை என்றால் சரிதான். அவர்களை விசாரித்தால் சம்பவம் நடந்ததா என்பது தெரியவரும் என்றால் சரிதான். நான் காவல் நிலையம் செல்லும்போது நேரம் இரவு 07.00 இருக்குமா என்றால் மாலை 04.30 மணி இருக்கும். காவல் நிலையத்திற்கு யார் யார் போனீர்கள் என்றால் நானும், எனது மகன் சரவணக்குமாரும் போனோம். அசோக்குமார் எனது மகனின் நண்பரா என்றால் பேசுவார்கள் பக்கத்து வீடு. கௌதம், தமிழரசு எனது மகனின் நண்பர்களா என்றால் அங்கு வந்து எல்லோரும் பேசிக்கொண்டு இருப்பார்கள். வீட்டிற்கு வந்து பேசுவார்களா என்றால் இல்லை. வெளியில் பேசிக்கொள்வார்கள். நான் சொல்வது போல் ஒரு சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எதிரி எனது நகையை திருடவில்லை என்றால் திருடினார். நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் நான் விருதுநகர் சிறைக்கு சென்று நீதிபதி அம்மா முன்பு மூன்று முறை அடையாளம் காட்டினேன். அதற்கு முன்பு போலீசார் காவல் நிலையத்தில் வைத்து எதிரியை காட்டினார்கள் என்றால் ஆமாம். காவல் நிலையத்தில் வைத்து போலீசார் எனக்கு அடையாளம் காட்டினார்கள் என்றால் இல்லை. போலீசார் அடையாளம் காட்டியதின் பேரில் தான் நான் சிறையில் எதிரியை அடையாளம் காட்டினேன் என்றால் சரியல்ல. எனது நகை திருடுபோனதற்கும் எதிரிக்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.